செ.வெ.எண்: 25 நாள்: 17.03.2017

# அரியலூர் மாவட்டத்தில் பாரத பிரதமரின் நுண்ணீர் பாசனத் திட்டத்தின்கீழ் சொட்டு நீர் பாசனம் அமைக்கப்பட்டுள்ள வயல்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு.

அரியலூர் மாவட்டம், அருங்கால் கிராமத்தில் பாரத பிரதமரின் நுண்ணீர் பாசனத் திட்டத்தின் கீழ் சொட்டு நீர் பயன்படுத்தும் விவசாயிகளின் வயல்களை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (17.03.2017) நேரில் ஆய்வு செய்தார்.

**இவ்வாய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் அதிக அளவில் பயிர் சாகுபடி செய்திட தமிழ்நாடு அரசு பாரத பிரதமரின் நுண்ணீர் பாசனத் திட்டத்தின் கீழ் சொட்டு நீர் முறையை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பெரு விவசாயிகள் முதல் சிறு, குறு விவசாயிகள் வரை பயன்பெற்று வருகின்றனர். இம்முறையை பயன்படுத்துவதால், விவசாயிகளின் பயிர்களுக்கு தண்ணீர் சிக்கனமாக பயன்படுத்தப்படுகிறது. அதிக அளவில் பயிர் சாகுபடி செய்ய முடிகிறது. மேலும், பயிர்களின் களைகளை கட்டுப்படுத்த முடிகிறது. பயிர்களுக்குத் தேவையான உரங்களும் குறைந்த அளவில் பயன்படுத்தப்படுவதால், பயிர்கள் செழிப்பாக வளர்ந்து விவசாயிகளுக்கு அதிக மகசூல் கிடைத்திடும்.

இதனைத்தொடர்ந்து, பாரத பிரதமரின் நுண்ணீர் பாசனத் திட்டத்தின் கீழ் சொட்டு நீர் பாசனம் முறையில் அருங்கால் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி திரு.விஜய் என்பவருடைய வயலில் 1.44 ஹெக்டேர் பரப்பளவில் பயிர்செய்த மக்காசோளம் மற்றும் வீரிய ஒட்டு பருத்தியினை பார்வையிட்டபொழுது, இம்முறையினால் பயிரிடப்பட்ட பருத்தி செடி, மக்காசோள செடிகள் நன்கு வளர்ச்சியடைந்து காணப்பட்டது.

இதேபோன்று, 0.99 ஹெக்டேர் பரப்பளவில் கரும்பு பயிரிட்ட விவசாயிகளின் வயல்களை பார்த்தபொழுது கரும்பும் களையில்லாமல் செழிப்பாக வளர்ச்சியடைந்துள்ளது. எனவே, கிணறு மற்றும் ஆழ்துளாய் கிணறு மூலம் பயிர் செய்திடும் விவசாயிகள் சொட்டு நீர் பாசன முறையை பயன்படுத்திடவேண்டும். இவ்வாறாக பயன்படுத்தும் விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறையின் மூலமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.1 இலட்சம் வரை மானியம் வழங்ககப்பட்டு வருகிறது. இவ்வரிய வாய்ப்பை பயன்படுத்தி இம்மாவட்டத்திலுள்ள விவசாயிகள் பாரத பிரதமரின் நுண்ணீர் பாசனத் திட்டத்தின்கீழ் சொட்டு நீர் பாசனம் முறையை பயன்படுத்தி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, இணை இயக்குநர் வேளாண்மை திரு.சதானந்தம், துணை இயக்குநர் திரு.மனோகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.இளங்கோவன், உதவி இயக்குநர் (பொ) திருமதி.சவீதா ஆகியோர் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.